**தலைப்பு 162 – மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 162 – மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஜனவரி 31 திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சுக்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 18,016.13 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 7,437.90 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 10,578.23 மில்லியன் அதாவது 58.72 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருவன | 477.68 | 459.02 | 18.66 | 3.91 |
| மூலதனம் | 17,538.45 | 6,978.88 | 10,559.57 | 60.21 |
| **மொத்தம்** | **18,016.13** | **7,437.90** | **10,578.23** | **58.72** |

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 16201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியான து |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2.00 | 0.38 | 0.30 | 0.55 | 40.00 | 8.39 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் கீழ் காணப்பட்ட இலக்கம் 7002/0000/00/0452/0015/000 கொண்ட கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 8.65 மில்லியனாக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | மின் உபகரணம் பற்றிய பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) |
| (iii) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |
| (iv) | அடியிதழ்சேர் புத்தகப் பதிவேடு | நிதிப் பிரமாணம 341 |
| (v) | பெறுகைகள் குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுக்களின் நாள்வரவுப் பதிவேடு | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.11.2 வழிகாட்டல் |

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளித்தல்

மீளாய்வாண்டின் போது அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐய வினா ஒன்றிற்கு 2017 ஜனவரி 31 திகதி வரையும் பதில் அனுப்பியிருக்கவில்லை. அவ் ஐய வினாவுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 150,000,000 தொகையாகியிருந்தது.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.3.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 திகதி 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.3.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.3.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 செப்தெம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அவ் அறிக்கை 2017 ஜனவரி 31 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருட்கள் மெய்மையாய்தல் நடாத்துதல்**

2014 அக்தோபர் 17 ஆம் திகதி 02/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2015 பொருட்கள் மெய்மையாய்தல் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அமைச்சினால் அவ்வறிக்கை 2016 ஜூலை 01 ஆம் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**(ஆ) ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறைசாரா விதமான உபயோகித்தல்**

பாதுகாப்பு அமைச்சுக்கு சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 1,067,637 இற்கான சொத்துக்கள் அமைச்சினால் உபயோகிக்கப்பட்டிருந்தன என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**3.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | **ரூபா.** | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| நிதிப் பிரமாணங்கள் 104 மற்றும் 103 | 719,471 | கொழும்பு பிரதான நகரத்தைச் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் 6 வாகனங்கள் பலவித விபத்துக்கு ள்ளாயிருந்ததுடன் அவ் வாகனங் களுக்கான பழுதுபார்த்தல் செலவுகள் காப்புறுதி கம்பனிகளில் இருந்து பெற்றிருந்த போதிலும், அவ் வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் கீழ் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| **(ஆ)முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கைகள்** | | |
| 2007 ஏப்ரல் 05 திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.1.3 ஆம் பந்தி | 10,832,729 | கொழும்பு பிரதான நகரத்தைச் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின், பகுதி நேர செயற்திட்ட பதவியணிக்கு 1/3 இற்கான படிகள் செலுத்தும் போது அதற்காக ஏனைய படிகள் தவிர உத்தியோகத்தர்களின் செயற்திட்டப் பதவிக்கு உரிய அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டுமெனினும், அடிப்படைச் சம்பளம் மற்றும் ஏனைய படிகள் உட்பட 1/3 இற்கான படிகள் கணக்கிடப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) **பகிரங்க சேவை ஆணைக் குழுவின் செயலாளரின் கடிதம்** | | |
| 2015 நவம்பர் 13 ஆம் திகதி பீஎஸ்சீ/ஏபீ/07/897 ஆம் இலக்கம் அனைத்து அமைச்சுக்களின் செயலாளருக்கு மற்றும் நிறுவனத் தலைவர்களை விளித்தல் கடிதம் | | அமைச்சின் மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) பதவிக்காக நியமனம் செய்யும் போது இலங்கை பொறியியல் சேவையின் விஷேட வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மற்றும் பகிரங்க சேவை ஆணைக் குழுவின் அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இலங்கை பொறியியல் சேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்யப்பட்டுள்ளது. |

## 3.6 வெளிநாட்டுதவிச் செயற்திட்டம்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியளிப்பின் மூலம் 03 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அதனது மதிப்பீட்டுக் கிரயத்தின் கூட்டுத்தொகை ரூபா 48,647 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அச் செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,358.4 மில்லியன் பயன்படுத்தியிருந்தது. இந்த வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கொழும்பு பிரதான நகரைச் சார்ந்த நகர அபிவிருத்திச் செயற்திட்டம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குறிப்பிட்ட செயற்திட்டக் காலப் பகுதியில் இலக்குகளை அடைவதற்கான பொறுப்புக்கள் சாட்டப்பட்டு மற்றும் ஒட்டுமொத்த செயற்திட்டக் காலப் பகுதியில் மாதாந்த காலாண்டு மற்றும் அரையாண்டு என்ற அடிப்படையில் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை வெளிப்படுத்திக் காட்டி முழுமையான விரிவான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3½ வருடங்கள் கடந்திருந்த பின்னரும் தயாரித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில்

உள்ளவாறு செயற்திட்டத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்த நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றுகையினை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ii) மொத்த செயற்திட்டக் கிரயம் ரூபா 27,890 மில்லியனுக்கான சமமான அமெரிக்க டொலர் 213 மில்லியனாக இருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 திகதியளவில் அவற்றில் 30 சதவீதம் ஆகிய ரூபா 8,517 மில்லியனுக்கு சமமான அமெரிக்க டொலர் 64 மில்லியனை பயன்படுத்தியிருந்தது. செயற்திட்டம் முடிவடைவதற்கு மேலும் சுமார் 1½ வருட காலப் பகுதி மாத்திரம் மீதியாக இருந்தது. அக் காலப்பகுதியில் 149 அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் குறிக்கோளை எய்தும் சவால் ஒன்று அமைச்சுக்கு சாட்டப்பட்டிருந்தது.

(iii) கொழும்பு ஆற்றுப் பள்ளத்தாக்கில் வெள்ளம் ஏற்படும் பாதுகாப்பற்ற நிலைமையை குறைப்பதற்காக 12 உப ஆக்கக் கூறுகள் செயற்திட்டக் காலப் பகுதியில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 6,403 மில்லியனுக்கான புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி செய்தல்களில் 07 வேலைகள் திட்டமிடல் கட்டத்திலும், மேலும் 9 வேலைகள் தொடர்பான பெறுகைகள் செயற்பாடுகள் 2015 திசெம்பர் 31 திகதியளவிலும் செயற்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டது.

**(ஆ) தந்திரோபாய வழியிலான நகர அபிவிருத்தி செயற்திட்டம்**

இந்த செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒட்டுமொத்த செயற்திட்ட காலத்தை மேவுகை செய்யும் விதமாக மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு அடிப்படையில் செயற்திட்ட காலப் பகுதியில் நிதி மற்றும் பௌதீக இலக்கினை எய்துவதற்காக பொறுப்புக்கள் சாட்டப்பட்டு முழுமையான விரிவான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல் நடத்தியிருக்கவில்லை.

(ii) செயற்திட்ட மதிப்பாய்வு செய்த ஆவணத்தின் 11 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்டத்தின் வேலைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்கான விரிவான பாதீடு ஒன்று தயாரித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் ரூபா 4,410 மில்லியனாகிய உள்நாட்டு நிதியளிப்புக்களில் மீளாய்வாண்டின் போது ரூபா 459.01 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) கடன் வழங்கப்படும் முகவர் நிலையத்தினால் ரூபா 19,257 மில்லியனுக்கு சமமான 147 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. மொத்த நிதியங்களில் இருந்து செயற்திட்ட விடயங்களை ஆரம்பித்திருந்த நாள் முதல் 02 வருடங்கள் கடந்த பின்னர் 2015 திசெம்பர் 31 திகதியளவில் 2.00 சதவீதத்தை பிரதிநிதிப்படுத்தும் ரூபா 387.29 மில்லியனுக்கு சமமான 2.93 மில்லியன அமெரிக்க டொலர்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது செயற்திட்ட செயலாற்றல் குழு 06 கூட்டத் தவணைகள் மற்றும் செயற்திட்ட ஆலோசனை குழு 04 கூட்டத் தவணைகளுக்கு மாத்திரம் நடைபெற்றிருந்தது. மாநகர சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதிநிதிகள் மேற்கூறிய குழுக்களில் நிரந்தர அடிப்படையில் நியமனம் செய்திருக்கவில்லை. அதன் பிரகாரம் முகவர் நிலையத்துடன் பொறுப்புக்களை பங்கீடு செய்வதன் மூலம் செயற்திட்டத்தின்

செயலாற்றலை இலகுவாக்குவதற்காக குழுக் கூட்டங்களில் ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எடுப்பதற்கு முடியாதிருந்தது.

(v) 2 வருட காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்காக திட்டமிட்டிருந்த காலி நகரத்தின் பிரதான கால்வாய்களில் மற்றும் வடிகால் முறைமையிலான திருத்த வேலைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருந்த 03 பாதைகளை புனர்நிர்மாணம் செய்தல், கோட்டை சுவர் உட்பகுதியில் நடமாடும் பாதைகளில் நிர்மாண வேலைகள் மற்றும் காலி மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஏனைய உட்கட்டமைப்பு வேலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைகள், 2016 ஏப்ரல் 30 திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. காலி நகரத்தில் புனர் நிர்மாணம் செய்யப்பட வேண்டிய 05 பாலங்களில் புனர்நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 50 சதவீதம் பூர்த்தி செய்வதற்கு எதிர்ப்பார்த்திருந்த போதிலும், அதன் முன்னேற்றம் 7 சதவீதமான மிகவும் குறைந்த பெறுமதியினை கொண்டிருந்தது.

(vi) “ஆதர் சீட் வீவிங் டெக்” (Arthur’s Seat Viewing Deck) இன் புனர்நிர்மாண வேலைகள் மற்றும் கண்டி நகரில் நீர் வழங்கள் முறைமையை திட்டமிடல் மற்றும் நிர்மாண வேலைகளின் மேற்பார்வை, விரிவாக்கல் மற்றும் புனர்நிர்மாண வேலை விடயங்கள் 2015 திசெம்பர் 31 திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அத் திகதியில் உள்ளவாறு முறையே 40 சதவீதம் மற்றும் 85 சதவீதம் ஆகிய மந்தமான முன்னேற்றமென்றே அறிவிக்கப்பட்டிருந்தது.

**(இ) கொழும்பு பிரதான நகரங்கள் சார்ந்த வெள்ளத்தின் பின்னர் பழைய நிலைமையை அடையும் நகர சுற்றாடலுக்கான பொறுப்பு நிதியம்**

---

கொழும்பு பிரதான நகரம் சார்ந்த ஒன்றிணைந்த வெள்ளப் பாதுகாப்பற்ற நிலைமையை மதிப்பீடு செய்தல், கொழும்பு பிரதான நகரம் சார்ந்த வெள்ளப் பெருக்கு ஏற்படும் பாதுகாப்பட்ட நிலைமையை குறைத்தலுக்காக தந்திரோபாயங்கள் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரித்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்யும் முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் செயற்திட்ட முகாமை மற்றும் நிர்வாகம் ஆகிய 04 ஆக்கக் கூறுகளின் கீழ் பொறுப்பு நிதியத்தின் கருமங்களை மேற்கொள்வதற்காக எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ் விடயங்கள் திட்டமிட்டிருந்தவாறு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அதன் பிரதி பலனாக நிதியத்திலிருந்து நிதியளிப்பு செய்வதற்காக 2014 ஜூலை 30 திகதி முதல் 2017 ஜனவரி 31 திகதி வரையான காலப் பகுதியில் 02 சந்தர்ப்பங்களில் மேலும் 2½ வருடங்களினால் நீடிக்கப்பட்டிருந்தது. பொறுப்பு நிதியத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், கொழும்பு பிரதான நகர் சார்ந்த நகர வலயத்தின் ஈர நிலத்திற்காக முக்கிய திட்டமொன்று தயாரிப்பதற்காக விடயம் மாத்திரம் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**(அ) வெளிநாட்டுதவி செயற்திட்டங்களில் உள்ளடங்கிய சில நிர்மாண வேலைகள் கைவிடப்படல்**

---

கொழும்பு பிரதான நகரம் சார்ந்த அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் 14 உப செயற்திட்டங்கள் ரூபா 3,822.68 மில்லியன் தொகையில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், நிதியத்தை பெற்றுக்கொள்ள முடியாமையினால் அந்த உப செயற்திட்டங்கள் முற்றாகக் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) **செயற்திட்டத்தின் சொத்துக்கள் குறைவாகப் பயன்படுத்தப்படல்/ விளைவற்றுக் காணப்படல்**

செயற்திட்டத்தினால் இலங்கை மத்திய வங்கியில் பேணப்பட்டு வரும் விஷேட டொலர் கணக்கில் 2015 ஜனவரி 31 திகதியில் உள்ளவாறு ரூபா 871.83 மில்லியனுக்கு சமமான 6.65 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான மீதியொன்று காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக, 2015 ஜூன் 10 திகதி ரூபா 503.25 மில்லியனுக்கு சமமான 03 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான கட்டுநிதி வழங்கியிருந்ததுடன் அவற்றில் ரூபா 475.92 மில்லியனுக்கு சமமான 3.48 மில்லியன் அமெரிக்க டொரர்கள் மீளாய்வாண்டின் போது திருப்பி எடுக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக செயற்திட்டத்தின் விடயங்களுக்காக நிதித் தேவைகள் தொடர்பாக பலவீனமான முன் கணிப்புக் காரணமாக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 888.68 மில்லியனுக்கு சமமான 6.16 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விஷேட டொலர் கணக்கில் மிகையாகக் காணப்பட்டது.

## 3.7 உள்நாட்டு நிதியளிப்புக்களின் மூலம் செயற்திட்டங்கள் செயற்படுத்துதல்

### நிதி வழங்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றமொன்று காணப்படாத செயற்திட்டங்கள்

நிர்மாண வேலை தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு முழுத்தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அச் செயற்திட்டம் தொடர்பாக முன்னேற்றம் ஒன்று அறிவிக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டது. அந்த செயற்திட்டங்கள் தொடர்பாக விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) மட்டக்குளி நலன்புரி நிலையம் நிர்மாணிப்பதற்காக 2015 திசெம்பர் 31 திகதி ரூபா 150 மில்லியனுக்கான குறைநிரப்பு மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சினால் நிதியேற்பாடுகள் பெறப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அப் பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் தொடர்பாக சரியான முன்னேற்றமொன்று பெற்றிருக்கவில்லை.

(ii) ஹதரலியத்த நகர அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக ரூபா 242 மில்லியன் செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதனது நிர்மாண வேலைகள் 2012 செப்தெம்பர் 06 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2016 ஜூன் 30 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும், அதில் முன்னேற்றமொன்றைப் பெற்றிருக்கவில்லை.

## 3.8 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையுள்ளவையாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) 2007 ஏப்ரல் 05 திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையினை பிழையாகப் புரிந்து பாரிய கொழும்பு போக்குவரத்தினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் காணப்படும் உப ஆக்கக் கூறு ஆகிய கடவத்தை, கடுவெல, கொட்டாவ நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (3k செயற்திட்டம்) பதவியணியினருக்கு ரூபா 1,184,985 இற்கான நிலுவைச் சம்பளம் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட முகாமைத்துவ அலகின் மூலம் ஈர நிலப் பிரதேசத்திற்காக பிரதான திட்டமொன்று தயாரித்தல் மற்றும் கொழும்பு பிரதான நகர் சார்ந்த வலயத்தில் உள்ளே, நாட்டின் மத்திய நீர் பாதைகளில் மற்றும் குளங்களில் நீரின் தரம் சார் நிலைமை தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உசாத்துணை கம்பனிகளில் இருந்து விலை கூறல்கள் அழைக்கப்பட்டிருந்தன. சர்வதேச தர நியமங்கள் தொடர்பாக உசாத்துணைச் சேவை கம்பனி ஒன்றில் இருந்து தகைமைகளை

உடைய மற்றும் அனுபவமுள்ள பொறியியல் பதவியணியினைக் கொண்ட உசாத்துணைக் கம்பனி ஒன்றினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 17.09 மில்லியனுக்கு சமமான 129,860 அமெரிக்க டொலர்களுக்கான குறைந்த விலைகூறல் உசாத்துணையாளர்களை தெரிவு செய்வதற்காக செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் தயாரிக்கப்பட்டிருந்த நிகழ்தகவுகளுக்கு முரணாக ரூபா. 30.25 மில்லியனுக்கு சமனான 229,885 அமெரிக்க டொலர்களாக இரண்டாவது குறைந்த விலை கூறல் சமர்ப்பித்திருந்த சர்வதேச கம்பனி ஒன்றிற்கு உசாத்துணை சேவை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) தந்திரோபாய நகர அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்ட ஒழுங்குபடுத்தல் அலகில் பகுதி நேர அடிப்படையில் சேவையாற்றிய 05 உத்தியோகத்களின் வேதனங்கள் ரூபா 700,900 தொகையினை இலங்கை அரசின் பங்களிப்பில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த வேலை சாட்டுதல்களின் தன்மையைத் தீர்மானிப்பதற்கு கடமைப்பட்டியல் அல்லது குறிப்பிட்ட நிபந்தனைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1632 காணித் துண்டுகள் ரூபா 662 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்திற்கு உரித்தாக்குவதற்கு செயற்திட்டத்தினால் திட்டமிடப்பட்டிருந்தது. அவற்றில் 820 காணித் துண்டுகள் மீளாய்வாண்டு இறுதி அளவில் உரித்தாக்கப்பட்டிருந்தன. இதற்கான ரூபா 235 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 188 மில்லியன் மேலதிக நட்டஈடாகச் செலுத்தப்பட்டிருந்தது. காணிக்கைகளை தனதாக்கல் மற்றும் தாபித்தலின் விதப்புரையின் கீழ் 3 பிரதேச செயலகங்களில் 14 காணித் துண்டுகளுக்காக ரூபா 8.07 மில்லியன் மேலதிக நட்டஈடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செலுத்துவதற்கான காரணம் மற்றும் தனதாக்கிய காணிகளின் அளவு ஆகிய விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

---

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறைசார்ந்தவையாகக் காணப்படவில்லை. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அரச பெறுகைகள் வழிகாட்டல் நடைமுறையில் இருந்து விளகல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு பிரதான நகரங்கள் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் வெள்ளம் மற்றும் அசுத்த நீரை அகற்றுவதற்காக புதிய வடிகால் அமைப்பு முறைமைத் திட்டமிடுவதற்காக தேவையான பொருத்தமான கணனி மென்பொருட்களினை இனங்கண்டிருக்கவில்லை. அதே போல் அதற்காக முறையான பெறுகைகள் நடைமுறை கடைபிடிக்கப்படாமல் வித்தியாசமான 2 மென்பொருட்கள் ரூபா 33.88 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்வதற்கு நேரிட்டிருந்தது.

(ஆ) கொழும்பு பிரதான நகரங்கள் சார்ந்த நகர அபிவிருத்தி செய்திட்டத்திற்காக South East Asia Technology Co. Ltd Thailand நிறுவனத்தின் உசாத்துணை பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ் உசாத்துணை வேலைகளின் பூர்த்தி செய்து ஒப்படைப்பதற்காக வழங்கியிருந்த காலத்தை விட மிகையான 2½ வருடங்களை

விட மிகையான காலம் தாமதிக்கப்பட்டிருந்தது. 2017 ஜூன் மாதம் அளவில் அச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் செயற்திட்டத்தின் பெறுகைகள் திட்டத்தின் படி சில உசாத்துணை சேவைகள் மற்றும் கருமங்கள் 2020 ஆண்டு வரை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

(இ) தந்திரோபாய வழியான நகரங்கள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் கண்டி நகரில் நிலத்தின் கீழ் 03 நீர்த்தாங்கிகள் நிர்மாணிக்கும் விடயங்களுக்காக தேவையான அளவை விட மிகையாக ரூபா 13.40 மில்லியன் பெறுமதியான 67 தொன் இரும்புக் கம்பிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் விளைவாக தேவையற்ற கிரயமாக ரூபா 2.68 மில்லியனிற்கான தயாரிப்பு ஒப்பந்தக்காரருக்கு முற்பணம் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 1 ஆம் இலக்க விண்ணப்ப விலைப்பட்டியலின் கீழ் 09 அளவைப் பத்திரம் விடயங்களுக்காக ரூபா 1.2 மில்லியன் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) கொழும்பு பிரதான நகரங்களைச் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் முகவர் நிறுவனங்களினால் கொள்திறன் அபிவிருத்திக்காக பயன்பாட்டு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ் வாகனங்களைக் கொள்வனவு செய்யும் போது திறைசேரிக்கு போலியான தகவல்கள் சமர்ப்பித்து மிகை சொகுசு புதிய வகையான பிராடோ வாகனங்கள் இரண்டு மற்றும் பஸ் வண்டி ஒன்று என்பன கொள்வனவு செய்வதற்காக ரூபா 59,145,494 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறு செலவிடப்பட்டிருந்தமையால் போதியளவு நிதி காணப்படாமையால் செயற்திட்டத்தின் கீழ் காணப்பட்ட 19 உப ஆக்கக்கூறுகளை முற்றாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்று மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) கொழும்பு பிரதான நகரங்களைச் சேர்ந்த செயற்திட்டத்தின் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புக்களை செலுத்துவதில் காணப்பட்ட தாமதத்தினால் ரூபா 67,320 இற்கான மிகைவிதிப்பு ஒன்று செலுத்துவதற்காக நேரிட்டிருந்தது.

(ஆ) கொழும்பு பிரதான நகரங்கள் சார்ந்த செயற்திட்டத்தின் கீழ் பத்தேகான பல்வகையதன உயிரியல் பூந்தோட்டம் நிர்மாணித்தல் தொடர்பாக பணம் செலுத்தும் போது ஒப்பந்தத்தை பெற்றிருந்த இலங்கை மின்சார நிர்மாண சபை (CECB) நிறுவனத்திற்கு ரூபா 92,070,585 தொகை முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளாமல் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த நிதியங்களில் இருந்து உத்தியோகத்தர் ஒருவரின் கலாநிதிப் பட்டப் படிப்பிற்காக பாடநெறி கட்டணமாக ரூபா 150,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய செயற்திட்டப் பணிப்பாளராக வரிசை அமைச்சின் மேலதிகச் செயலாளர் (தொழில்நுட்ப) ஆக கடமையாற்றுவதற்காக அவரது உத்தியோகபூர்வ வாகனத்திற்காக மாதாந்தம் ரூபா 19,550 இற்கான எரிபொருள் படியொன்று சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்பட்டிருந்தது. அப் படியினை பயன்படுத்தி வாகனத்திற்கு எரிபொருள் பெற்றிருக்கவில்லை. முன்னைய செயற்திட்டம் பணிப்பாளர் செயற்திட்டத்தில் கடமையாற்றிய 2012 மார்ச் மாதம் முதல் 2015 மார்ச் மாதம் வரையான 38 மாத காலப் பகுதிக்காக செயற்திட்டத்திலிருந்து மாதாந்தம் 120 லீட்டர் வீதம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. எரிபொருள் 4560 லீட்டர்கள் எனினும் 10813 லீட்டர்கள் பெற்றிருந்தது. இதன் பிரகாரம் சுற்றறிக்கை

ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 718,980 தொகை பெறுமதியான 6252 லீற்றர் எரிபொருள் மிகையாகப் பெற்றிருந்தார்.

**3.11 முகாமைத்துவப் பலவீனங்கள்**

---

**கொழும்பு பிரதான நகரங்களைச் சார்ந்த நகர் அபிவிருத்திச் செயற்திட்டம்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

கொழும்பு பிரதான நகரங்களைச் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம்
தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) செயற்திட்ட அலுவலக்தினால் பயன்படுத்துவதற்காக கணக்கீடு செய்யும் மற்றும் செயற்திட்டத்தை மீளாய்வு மென்பொருளொன்று பெற்றுக்கொள்வதற்காக முற்பணமாக ரூபா 1,000,575 தொகை செலுத்தப்பட்டு ஒரு வருடத்தை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும், குறிப்பிட்ட மென்பொருள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு பிரதான நகரங்கள் சார்ந்த நகர அபிவிருத்திச் செயற்திட்டம் 2015 வருடம் இறுதியளவில் மிகவும் குறைந்த செயலாற்றுகை ஒன்றினை காட்டியது. மேலும் செயற்திட்டத்தை செயற்படுத்தும் முகவர் நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்திட்ட உத்தியோகத்தர்களுடன் முன்னேற்றம் மீளாய்வுக் கூட்டங்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையாளர்கள் மற்றும் செயற்திட்ட ஒழுங்குபடுத்தல் குழுக் கூட்டங்கள் குறைந்த பட்சம் 2 மாதங்களுக்கு ஒரு முறையேனும் நடாத்தப்பட வேண்டுமெனினும், ஆண்டின் போது ஒரு முறை மாத்திரம் கூட்டம் நடத்தப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தக்காரர்கள் வேலை செய்யக் கூடிய இயலுமை மீது கவனம் செலுத்தாமல் ஒரே தடவையில் பல ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்தமையால், ஒப்பந்த வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய காலம் பின்வருமாறு நீடிக்கப்பட்டிருந்தது.

(i) மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 374 மில்லியனான 06 ஒப்பந்தவேலைகள் ஒரே ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒப்பந்த வேலைகளை பூர்த்தி செய்வதற்கு 02 முதல் 114 நாட்கள் வரை காலநீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ii) மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 1,620 மில்லியனுக்கான 05 ஒப்பந்த வேலைகள் வேறு ஒரு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதனது காலம் 117 முதல் 209 நாட்கள் வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(iii) மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 4,702.09 இற்கான வழங்கப்பட்டிருந்த 09 ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்டிருந்த ஏனைய ஒப்பந்தக்காரர் மூவருக்கு 98 முதல் 188 நாட்கள் வரை காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

## 3.11 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி யினர் | உள்ளபடி யான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | மிகை களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 31 | 16 | 15 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 02 | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 95 | 25 | 70 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 44 | 12 | 32 | - |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக/ஒப்பந்த) | - | 04 | - | 04 |
| | **மொத்தம்** | **176** | **59** | **121** | **04** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மூன்றாம் நிலை உத்தியோகத்தர் ஒருவரும் மற்றும் இரண்டாம் நிலை 02 உத்தியோகத்தர்கள் இருவரும் தற்காலிகமாக சேர்க்கப்பட்டிருந்தார்.

**(ஆ) ஏனைய நிறுவனங்களில் இருந்து பெற்றிருந்த மனித வளங்கள்**

அமைச்சின் விடயங்களுக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் சம்பளம் செலுத்தப்படாமல் இணக்கப்பட்டிருந்தனர்.